ந.க.எண் அஆ1/26306/2018

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
(வனத்துறைத்தலைவர்) அலுவலகம்,
பனகல் மாளிகை, சைதாப்பேட்டை
சென்னை- 15. நாள்: 21.06.2018.

பொருள்: வனம் - தமிழ்நாடு வனச்சார்நிலைப்பணி - மேல்முறையீட்டு மனுக்கள் W.A No. 811, 812 மற்றும் 877/2011 மற்றும் W.A.(MD).No.1151 of 2017 - மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 17.04.2018 அன்று ஆணை வழங்கியது – ஆணையை நிறைவேற்றுதல் - வனக்காப்பாளர் நிலையில் முதுநிலையை மாற்றியமைத்தல் – குழு அமைத்தது – தொடர்பாக

பார்வை:
1. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டு மனுக்கள் W.A.No.811,812 and 877 of 2011 and W.A.(MD) No.1151/2017ல் 17.04.2018 அன்று வழங்கிய ஆணை
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் ந.க.எண்.அஆ1/21033/2013 நாள்.19.06.2018.

*******

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டு மனுக்கள் W.A.No.811,812 and 877 of 2011 and W.A.(MD) No.1151/2017ல் 17.04.2018 அன்று வழங்கிய ஆணையில் அறிவுறுத்தியபடி பார்வை 2-ல் கண்ட கடிதத்தில் வனக்காப்பாளர் நிலையில் முதுநிலையை மாற்றியமைக்க கீழ்கண்டவாறு குழு அமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| குழு தலைவர் | இணை இயக்குநர் | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத்தலைவர்) அலுவலகம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை சென்னை- 15 |
| குழு உறுப்பினர் - 1 | நேர்முக உதவியாளர் (ரிட்) | |
| குழு உறுப்பினர் - 2 | கண்காணிப்பாளர் (W-பிரிவு) | |

2) மேற்கண்ட குழு இருதரப்பு மற்றும் தனியர்களின் குறைகளை பெற்று ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட விதிகள், அரசு ஆணைகள் மற்றும் இட ஒதுக்கீடு விதிகளை பின்பற்றி வனக்காப்பாளர் நிலையில் முதுநிலையை மாற்றியமைக்க உள்ளது.

3) எனவே, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஆணையின் அடிப்படையில் வனக்காப்பாளர் நிலையில் முதுநிலையை மாற்றியமைக்க ஏதுவாக மேற்கண்ட வழக்கில் சம்பந்தபட்ட அனைத்து தரப்புகளும் தங்கள் விண்ணப்பங்களை கீழ்குறிப்பிடப்பட்ட அவரவர்களுக்குரிய மாவட்டங்களுக்கான தேதிகளில் நேரில் ஆஜராகி தங்களுடைய முதுநிலை குறித்து தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| பணிபுரியும் மாவட்டம் | மண்டலம் | ஆஜராக வேண்டிய தேதி |
|---|---|---|
| சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் | சென்னை & ஆராய்ச்சி | 27.06.2018 |
| வேலூர் மற்றும் திருவண்ணாமலை | வேலூர் & வ.செ.திட்டம் | 28.06.2018 |
| தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி | தருமபுரி | 29.06.2018 |
| விழுப்புரம் மற்றும் கடலூர் | விழுப்புரம் | 02.07.2018 |
| சேலம் மற்றும் நாமக்கல் | சேலம் | 03.07.2018 |
| ஈரோடு மற்றும் திருப்பூர் | ATR & STR | 04.07.2018 |

| | | |
|---|---|---|
| கோயமுத்தூர் மற்றும் நீலகிரி | கோயமுத்தூர் & MTR, உதகை & வ.செ.திட்டம் & TNFA, கோவை | 05.07.2018 |
| அரியலூர் மற்றும் பெரம்பலூர் | திருச்சி & வ.செ.திட்டம் | 06.07.2018 |
| திருச்சி மற்றும் புதுக்கோட்டை | திருச்சி | 09.07.2018 |
| தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் | தஞ்சாவூர் | 10.07.2018 |
| கரூர் மற்றும் திண்டுக்கல் | திண்டுக்கல் | 11.07.2018 |
| மதுரை மற்றும் தேனி | மதுரை & TNFTC, வைகை அணை | 12.07.2018 |
| இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் | விருதுநகர் | 13.07.2018 |
| திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி | திருநெல்வேலி / KMTR | 16.07.2018 |
| சிவகங்கை மற்றும் தூத்துக்குடி | விருதுநகர் மற்றும் திருநெல்வேலி | 17.07.2018 |

தனியர் (ஓய்வு பெற்றவர் உட்பட) தங்கள் பணிபுரியும் மாவட்டங்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் குழு முன் நேரில் ஆஜராக வேண்டும். மற்ற தேதிகளில் ஆஜராகி அளிக்கப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது. மேலும் குழு முன் நேரில் ஆஜராக வரும் நாள் பணி செய்ததாக கருதப்பட மாட்டாது. எனவே, எந்த வகையான படிகளையும் கோர இயலாது. மேற்படி குழு முன் நேரில் ஆஜராக விரும்பாத நபர்கள் தங்களது விண்ணப்பங்களை கீழ்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

"தலைவர் மற்றும் இணை இயக்குநர்
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத்தலைவர்) அலுவலகம்,
6வது தளம், பனகல் மாளிகை,
சைதாப்பேட்டை, சென்னை- 15"

4) விண்ணப்பங்கள் ஏதும் சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து பெறப்படாவிடின் அந்நபர்கள் குழு எடுக்கும் முடிவுகளுக்கு சம்மதம் அளிப்பதாக எடுத்துக்கொள்ளப்படும்.

21/6/18

தலைவர் மற்றும் இணை இயக்குநர்

பெறுநர்

வழக்கில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புகள், தனியர்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்கள்
(சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மூலமாக)

நகல்:- அனைத்து அலுவலர்கள்

2) மேற்கண்ட கடிதத்தை அனைத்து வனக்காப்பாளர்கள்,ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளரகள் மற்றும் வனக்காப்பாளர் நிலையில் இருந்து தற்காலிக பதவி உயர்வு பெற்ற வனவர்களுக்கு சார்வு செய்து இரண்டாம் பிரதியில் ஒப்புதல் பெற்று கோப்பில் வைக்குமாறு தலைமை வனப்பாதுகாவலர் / வனப்பாதுகாவலர் / மாவட்ட வன அலுவலர் / துணை வனப்பாதுகாவலர் / உதவி வனப்பாதுகாவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நகல்: தகவல் பலகை.

21/6/18